| **அனுப்புநர்** | **பெறுநர்** |
|---|---|
| திரு.சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,<br>(பாண்டிச்சேரி மற்றும் காரைக்கால் நீங்கலாக) |

**ந.க.எண்.018653 /NTSE/2021 நாள் : 19 .01.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– தேசிய திறனாய்வுத் தேர்வு **(NTSE)** பிப்ரவரி 2022 – தேர்வு தேதி மற்றும் தேர்வுக் கூட நுழைவுச் சீட்டுகள் பதிவிறக்க தேதி மாற்றம் செய்தல் – தொடர்பாக.

**பார்வை:** 1.அரசின் செய்தி வெளியீடு எண் 070, நாள். 10.01.2022.
2.இதே எண்ணிட்ட செய்திக்குறிப்பு நாள்.19.01.2022

******

பார்வை 2–ல் காணும் செய்திக்குறிப்பிற்கிணங்க, 29.01.2022 அன்று நடைபெற இருந்த தேசிய திறனாய்வுத் தேர்வு (NTSE) 05.02.2022 (சனிக்கிழமை) நடைபெறும். இவ்விவரத்தினை அனைத்து பள்ளி தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் **( STATE / ICSE / CBSE / KV )** வாயிலாக விண்ணப்பித்த தேர்வர்களுக்கு தேர்வு தேதி மாற்றம் குறித்து தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்படி தேர்விற்கான தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுக்களை 19.01.2022 அன்று பதிவிறக்கம் செய்ய அறிவுறுத்தப்பட்ட நிலையில், தேர்வுத் தேதி மாற்றத்தின் காரணமாக **25.01.2022 அன்று பிற்பகல் முதல்** பள்ளித் தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள் **www.dge.tn.gov.in** என்ற இணையதளம் மூலம் ஏற்கனவே இத்தேர்விற்கு வழங்கப்பட்ட **User ID/Password**–ஐ கொண்டு பதிவிறக்கம் செய்து கொள்ள உரிய அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

..2..

தேர்வர்களின் **தேர்வுகூட நுழைவுச் சீட்டுகளில் பெயர் / புகைப்படம் / பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தம் ஏதும் இருப்பின் திருத்தத்தினை சிகப்பு நிற மையினால் சுழித்து சரியான பதிவினை குறிப்பிட்டு பள்ளி தலைமையாசிரியர்களிடம் சான்றொப்பம் பெற்று தேர்வெழுத அத்தேர்வர்களுக்கு அனுமதி வழங்க தேர்வு மைய கண்காணிப்பாளரிடம் அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**ஒம்/–**
**இயக்குநர்**

<u>நகல்</u>

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் – மேற்காண் தேர்விற்கான பெயர்ப்பட்டியல்களை அனைத்து தேர்வுமைய கண்காணிப்பாளர்கள் பதிவிறக்கம் செய்ய உரிய அறிவுரை வழங்கவும், தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து தலைமையாசிரியர்கள் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுக்களை பதிவிறக்கம் செய்து மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
   – தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும்